


தலைவர் டியட்டர் எப். உக்டர்ப்
பிரதான தலைமையில் இரண்டாம் ஆலோசகர்

# கிறிஸ்துமஸில் கிறிஸ்துவைத் தேடுதல்

பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபை அங்கத்தினர்களாக நாம் யார் என புரிந்துகொள்ள விரும்புகிற அனைவருக்கும், இந்த மூன்று வார்த்தைகளாலும் வரையறுக்கப்பட்ட தொடக்கப் புள்ளியை நான் கொடுக்க விரும்புகிறேன்: நாம் கிறிஸ்துவைத் தேடுகிறோம்.

நாம் அவரிடமிருந்து கற்றுகொள்ள நாடுகிறோம். அவரைப் பின்பற்ற. அதிகமாக அவரைப்போலாக.

வருடம் முழுவதும் ஒவ்வொரு நாளும் நாம் அவரைத் தேடுகிறோம்.

ஆனால் விசேஷமாக, வருடத்தின் இந்த கிறிஸ்துமஸ் நேரத்திலே, நமது அன்புக்குரிய இரட்சகரின் பிறப்பைக் கொண்டாடும்போது, நமது இருதயங்கள் எப்போதையும் விட அதிகமாக அவரை நோக்கி சாய்ந்திருக்கின்றன.

கிறிஸ்துமஸைக் கொண்டாடும் நமது ஆயத்தங்களின் பகுதியாக, இரட்சகரின் வருகையை வரவேற்க இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் எவ்வாறு ஆயத்தமாயிருந்தார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளுவோமாக.

**மேய்ப்பர்கள்**

மேய்ப்பர்களைப்பற்றி நமக்கு அதிகம் தெரியாது, “வயல்வெளிகளில் தங்கி ராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்,”[1] என மட்டும் அறிவோம். வாழ்வதற்காக நாள்முழுவதும் சம்பாதிக்கிற பாராட்டப்படக்கூடிய அநேக ஆத்துமாக்களைப்போல, மேய்ப்பர்கள் சாதாரண ஜனங்களை விட விசேஷித்தவர்களாக இருந்தார்கள்.

ஒரு சமயத்தில் கிறிஸ்துவை ஆர்வமாகத் தேடாமல் இருந்திருக்கக்கூடிய, ஆனால் பரலோகங்கள் திறந்து அவர்களுக்கு கிறிஸ்து பிரசங்கித்தபோது அவர்கள் இருதயங்கள் மாறி, ஜனங்களுக்கு அவர்கள் பிரதிநிதியாக இருந்திருக்கலாம்.

பரலோக தூதர்களின் குரலைக் கேட்ட பிறகு, பார்க்க விரும்பி உடனே பெத்லகேம் சென்றவர்கள் இவர்களே.[2]

**சாஸ்திரிகள்**

சாஸ்திரிகள் தேவ குமாரனாகிய மேசியாவின் வருகையை ஆராய்ந்து கொண்டிருந்த பண்டிதர்கள். அவர்கள் கற்றுகொண்டதன்மூலம், அவரது பிறப்பைக் குறிப்பிட்ட அடையாளங்களை அவர்கள் கண்டனர். அவர்கள் அவற்றை அடையாளம் கண்டபிறகு, “யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?” எனக் கேட்டு தங்கள் வீடுகளை விட்டுவிட்டு எருசலேமுக்குப் பிரயாணப்பட்டார்கள்.[3]

கிறிஸ்துவைப்பற்றிய அவர்களது அறிவு, கல்வியால் மட்டுமே இருக்கவில்லை. அவரது பிறப்பின் அடையாளங்களைப் பார்த்தபிறகு, அவர்கள் செயல்பட்டனர். அவர்கள் கிறிஸ்துவைக் காணப் புறப்பட்டனர்.

கற்றுகொள்வதினாலும், ஆராய்ச்சியாலும் கிறிஸ்துவைத் தேடுபவர்களை சாஸ்திரிகள் குறிக்கின்றனர். சத்தியத்தின் மீது அவர்களது அர்ப்பணிப்பு, கிறிஸ்துவைக் காணவும் இராஜாக்களின் இராஜாவாகவும், மனுக்குலத்தின் இரட்சகராகவும் அவரை தொழுதுகொள்ளவும் இறுதியில் அவர்களை வழிநடத்துகிறது.

**சிமியோனும் அன்னாளும்**

சிமியோனும் அன்னாளும், ஆவியின் மூலமாக கிறிஸ்துவைத் தேடுபவர்களின் பிரதிநிதிகளாக இருக்கலாம். இந்த அற்புதமான ஆத்துமாக்கள், அர்ப்பணிப்புள்ள மத நம்பிக்கையுடையவர்கள். உபவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம், அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ்ந்து, தேவகுமாரனின் வருகையின் நாளைக் காண ஆர்வமாய்க் காத்திருந்தார்கள்.

நம்பிக்கையுடனும், தாழ்மையுடனும், விசுவாசத்துடனும், இரட்சகரின் வருகைக்காக அவர்கள் பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

இறுதியாக மனுக்குலத்தின் பாவங்களைத் தம்மீது ஒருநாள் எடுத்துக்கொள்ளப் போகிற பிள்ளையை மரியாளும் யோசேப்பும் அவர்களிடம் காட்டியபோது, அவர்களது விசுவாசத்துக்கு பலன் கிடைத்தது.[5]

**நெப்பியர் மற்றும் லாமானியர் மத்தியில் விசுவாசிகள்**

புதிய உலகத்தில் எவ்வாறு விசுவாசிகள் இரட்சகரின் பிறப்பின் அடையாளங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் என்ற மனதைத்தொடும் கதை மார்மன் புஸ்தகத்தில் காணப்படுகிறது.

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருந்தவர்கள் பரியாசம் பண்ணப்பட்டு துன்புறுத்தப்பட்டதை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். அன்றைய நவீனவாதிகள், விசுவாசிகளை, முட்டாள்தனமான மூடநம்பிக்கைகளை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தினர். தேசத்திலே “மிகப்பெரிய கலகம்” உண்டாக்கும் அளவுக்கு உண்மையாகவே அவிசுவாசிகள் தங்களுடைய வாயால் கிண்டல் செய்தார்கள். (3 நெப்பி 1:7) இரட்சகர் பிறப்பார் என நம்பியவர்களை ஏளனம் செய்தார்கள்.

இரட்சகரை நம்புபவர்களை ஒரேயடியாக அமைதியாக்குவதை மனதில் நிரப்புகிற அளவுக்கு அவர்களது கோபமும் கர்ச்சனையும் அதிகரித்தது. மார்மன் புஸ்தகம் அந்த வியத்தகு தீர்மானத்தைப் பதிவு செய்கிறது.6

பிறர் சிரித்து, கேலி செய்து, ஏளனம் செய்தபோதும், அந்த நேரத்தில் வாழ்ந்த விசுவாசிகள் கிறிஸ்துவைத் தேடியவர்களை பிரதிபலித்தனர். சுத்திகரிக்கப்படாத, நவீனமற்ற, அல்லது ஏமாந்தவர்கள் என பிறர் அவர்களை கேலிச்சித்திரமாக்க முயற்சித்தபோதும், அவர்கள் கிறிஸ்துவைத் தேடினார்கள்.

ஆனால் பிறரின் அவமரியாதை உண்மையான விசுவாசிகளை கிறிஸ்துவைத் தேடுவதிலிருந்து அதைரியப்படுத்தவில்லை.

**நாம் கிறிஸ்துவைத் தேடுகிறோம்**

வருடம் முழுவதும், ஒருவேளை விசேஷமாக இந்த கிறிஸ்துமஸ் காலத்தில், மீண்டும் ஒருமுறை “நான் எப்படி கிறிஸ்துவைத் தேடுகிறேன்?”என்ற கேள்வியைக் கேட்க நமக்கு சாதகமளிக்கும்.

அவனது வாழ்க்கையின் கடினமான நேரத்தில், மாபெரும் தாவீது இராஜா எழுதினான், “தேவனே நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுவேன்; என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது; என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.”7

ஒருவேளை தேவனைத் தேடும் இந்த மனோபாவம், தேவனின் இருதயத்தின்படியான மனுஷன் என தாவீது விவரிக்கப்படுகிற காரணங்களில் ஒன்றாகும்.8

இந்த கிறிஸ்துமஸ் காலத்திலும், வருடம் முழுவதும், சமாதானப் பிரபுவாகிய, இஸ்ரவேலின் பரிசுத்தராகிய, நமது இரட்சகரை நமது இருதயங்களோடும், ஆத்துமாக்களோடும் தேடுவோமாக. ஏனெனில் இந்த வாஞ்சை வெகுவாக, பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் அங்கத்தினர்களாக நாம் யார் என்பது மட்டுமின்றி, கிறிஸ்துவின் சீஷர்களாக நாம் உண்மையாகவே யார் என அதிகமாக வரையறுக்கிறது.

**குறிப்புகள்**

1. லூக்கா 2:8.
2. லூக்கா 2:15 பார்க்கவும்.
3. மத்தேயு 2:1–2 பார்க்கவும்.
4. மத்தேயு 2:11 பார்க்கவும்.
5. லூக்கா 2:22–38 பார்க்கவும்.
6. 3 நெப்பி 1 பார்க்கவும்.
7. சங்கீதம் 63:1.
8. அப்போஸ்தலர் 13:22 பார்க்கவும்.

---

**இச்செய்தியிலிருந்து கற்பித்தல்**

தலைவர் உக்டர்ப் ஆலோசனையளிப்பதுபோல நாம் எப்படி கிறிஸ்துவை சிறந்த விதமாக தேடலாம்? “நான் எப்படி கிறிஸ்துவை தேடுகிறேன்?” என தங்களையே கேட்க நீங்கள் கற்பிப்பவர்களை நீங்கள் ஊக்குவிக்கலாம். அவர்களது அன்றாட குடும்ப வேத படிப்பு நேரத்தில், அவர்கள் ஒவ்வொருவரும் எப்படி கிறிஸ்துவைத் தேடுகிறார்கள் எனப் பகிர்ந்துகொள்ள அவர்களை அழைப்பதைக் கருத்தில் கொள்ளவும். நீங்கள் கற்பிப்பவர்களுடன் Mormon.orgல் கிறிஸ்துமஸ் காணொலி பார்த்து, அவரது போதனைகளைப் பின்பற்றி கிறிஸ்துவைத் தேட இந்த வருடாந்தர சந்தர்ப்பத்தில் பங்குபெற அழைக்கலாம்.

## பிள்ளைகள்

## இயேசுவுக்காக காத்திருத்தல்

இயேசு பிறப்பதற்காக அநேக ஜனங்கள் எதிர்பார்த்து, காத்திருந்தனர். இப்போது நாம் அவர் திரும்ப வர எதிர்பார்த்து, காத்திருக்கிறோம்! இயேசுவைப்பற்றி கற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றி நாம் ஆயத்தமாகலாம். நீங்கள் எப்படி இயேசுவைப் பின்பற்றுகிறீர்கள்? ஒரு நட்சத்திரம் வரைந்து அதனுள்ளே உங்கள் கருத்துக்களை எழுதவும்.

© 2017 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாட்டால் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. First Presidency Message, December 2017ன் மொழிபெயர்ப்பு. Tamil. 97932 418

# ஒருவருக்கொருவரின் பாரத்தை சுமக்க சித்தமாயிருத்தல்

விசுவாசம் குடும்பம் ஒத்தாசை

*ஜெபத்துடன் இச்செய்தியைப் படித்து, எதைப் பகிர்ந்துகொள்வது என அறிய உணர்த்துதலுக்காக நாடவும்.*

“நமது கவனம், நமது ஊக்குவிப்பு, நமது ஆதரவு, நமது ஆறுதல், நமது தயவு தேவைப்படுவோரால் நாம் சூழப்பட்டிருக்கிறோம்,” என தலைவர் தாமஸ் எஸ். மான்சன் சொன்னார். “அவரது பிள்ளைகளுக்கு ஊழியம் செய்யவும், உயர்த்தவும் கடமையுடன் நாம் இங்கே பூமியிலிருக்கிற கர்த்தரின் கரங்கள். அவர் நம் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறார்.” 1

பிரதான தலைமையில் முதலாம் ஆலோசகர், தலைவர் ஹென்றி பி. ஐரிங் சொன்னார்: “நீங்கள் சபைக்குள் வந்தபோது உங்கள் இருதயத்துக்குள் ஒரு மிகப்பெரிய மாற்றம் தொடங்கியது. நீங்கள் ஒரு உடன்படிக்கை செய்தீர்கள், நீங்கள் ஒரு வாக்குத்தத்தத்தைப் பெற்றீர்கள், அது உங்கள் தன்மையையே மாற்றத் தொடங்கியது.

“...[பிறரின்] பாரங்களை இலகுவாக்கவும் ஆறுதலளிக்கவும் கர்த்தருக்கு நீங்கள் உதவுவீர்கள் என வாக்களித்தீர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்றபோது, அந்தப் பாரங்களை இலகுவாக்க உதவ வல்லமை கொடுக்கப்பட்டீர்கள்.”2

“மனதுருக்கத்துடனும், நம்பிக்கையுடனும், தயாளத்துடனும், இரட்சகரைப்போல பிறரைப் பார்க்க சுவிசேஷத்தின் ஒளியை பயன்படுத்த நாம் விரும்புகிறோம்,”என ஒத்தாசைச் சங்க பொதுத் தலைவி ஜீன் பி. பிங்காம் சொன்னார். “பிறரின் இருதயங்களை நாம் முழுமையாக புரிந்துகொள்ளும் நாள்வரும்போது, பிறருக்கு தயாளமிக்க சிந்தனைகளையும் வார்த்தைகளையும் நாம் கொடுப்பது போல நமக்கு இரக்கம் கொடுக்கப்பட்டதற்காக, நன்றியுள்ளவர்களாக இருப்போம். ...

“நமது இரட்சகரைப்போல ஆக முயற்சி செய்யும்போது ஒவ்வொருவரையும் முன்னேறச் செய்வது நமது கடமையும் சிலாக்கியமுமாகும்.”3

நாம் ஒருவருக்கொருவரின் பாரத்தை சுமக்கும்போதும், நமது உடன்படிக்கைகளைக் காத்துக் கொள்ளும்போதும், பிறரைக் குணமாக்க இயேசு கிறிஸ்துவுக்கு நாம் வழியைத் திறக்கிறோம். “பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் ஜெப்ரி ஆர். ஹாலண்ட் போதித்தார்: “சிலுவையிலறைதல் மற்றும் பாவநிவர்த்தியின் நினைத்துப் பார்க்க முடியாத விலையைக் கருத்தில் கொள்ளும்போது, இப்போது அவர் தம் முதுகை நமக்குக் காட்டப்போவதில்லை என நான் உங்களுக்கு வாக்களிக்கிறேன். ‘என்னிடத்தில் வாருங்கள்,’என ஆவியில் எளிமையுள்ளவர்களிடத்தில் அவர் சொல்லும்போது, வெளியேறும் வழியும், மேலே செல்லும் வழியும் அவருக்குத் தெரியும் என அவர் அறிவார் என்ற அர்த்தத்தில் அவர் சொல்லுகிறார். அந்தப் பாதையில் அவர் நடந்திருக்கிறபடியால், அதை அவர் அறிவார். அவரே வழி என்பதால் அவர் வழியை அறிகிறார்.” 4

## *கூடுதல் வசனங்கள்*

மத்தேயு 25:40; கலாத்தியர் 6:2; மோசியா 2:17; 18:8-9

## குறிப்புகள்

1. Thomas S. Monson, “Serve the Lord with Love,” Liahona, Feb. 2014, 4.
2. Henry B. Eyring, “The Comforter,” Liahona, May 2015, 18.
3. Jean B. Bingham, “I Will Bring the Light of the Gospel into My Home,” Liahona, Nov. 2016, 6, 8.
4. Jeffrey R. Holland, “Broken Things to Mend,” Liahona, May 2006, 71.

***இதைக் கருத்தில் கொள்ளவும்***

பிறரின் பாரங்களை சுமக்க உதவுவதும், நமது உடன்படிக்கைகளைக் காத்துக் கொள்வதும், தேவையிலிருப்போரைக் குணமாக்க இயேசு கிறிஸ்துவுக்கு எவ்வாறு வழியைத் திறக்கிறது?

© 2017 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாட்டால் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. Visiting Teaching Message, December 2017 ன் மொழிபெயர்ப்பு. Tamil. 97932 418